## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு

# அலகுகளை அடிப்படையாகக்கொண்ட கட்டண விதிப்பனவு முறையிலிருந்து நேரத்தை அடிப்படையாகக்கொண்ட கட்டண விதிப்பனவு முறைக்கு மாறும்படி ஸ்ரீ லங்கா ரெலிகம் லிமிட்டெட்டிற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவால் வழங்கப்படும் பணிப்புரை

1999 மார்ச் 29ஆம் திகதி திங்கட்கிழனைய 1973/10ஆம் இலக்கம்கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கெசற்றில் அடங்கியுள்ளதும் திருத்தப்பட்டவாறானதுமான 1991ஆம் ஆண்டின் 25ஆம இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவால் வழங்கப்பட்ட கட்டளை தொடர்பாக, ஆணைக்குழு பின்வருவனவற்றைத் தங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றது.

2.1 நேரத்தை அடிப்படையாகக்கொண்ட கட்டண விதிப்பனவு.
2.2 நேரத்தை அடிப்படையாக்கொண்ட கட்டண விதிப்பனவு தொடர்பாக கட்டளைக்கான காரணங்கள்.

குழு சொல்லப்பட்ட கட்டளையில் ஸ்ரீ.ரெ.லி. மீது நேர அட்டவணையொன்றை விதிக்காதபோதிலும் அதன் முறைமைக்கு மேலும் நவீன வடிவம் ஒன்றை அறிமுகம் செய்வதற்கு ஸ்ரீ.ரெ.லி. மேலும் துரிதமாக செயலாற்றும் என எதிர்பார்த்தது.

நேரத்தை அடிப்படையாகக்கொண்ட கட்டண விதிப்பனவு தனத்தனி விடயங்கள் நிரற்படுத்தப்பட்ட கட்டணத் தயாரிப்புமுறையொன்றை அறிமுகம்செய்வதற்குப் பிணிக்கப்பட்டுள்ளது எனவும் சொல்லப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டது. தற்பொழுது அனைத்துப் பரிவர்த்தனைகளிலும் விடயங்கள் தனித்தனியாக நிரற்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் வழங்கப்படுவதை நாமறிவோம்.

புதிய கட்டணத் தயாரிப்புமுறை அறிமுகம்செய்யப்பட்டபோது பொது மக்களுக்கு ஸ்ரீ.ரெ.லி. யினால் அளிக்கப்பட்ட வாக்குறுதியைப்பற்றியும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இப்புதிய கட்டணத் தயாரிப்பு முறையின்கீழ் ஸ்ரீ.ரெ.லி. நேரத்தை அடிப்படையாகக்கொண்ட கட்டணத் தயாரிப்புமுறையொன்றை நோக்கி நகரக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது என்பது பொது மக்களுக்கு அறிக்கப்பட்ட அக் கூற்றுக்களிலிருந்து மிகத் தெளிவாகின்றது.

வழங்கப்படும்பல்வேறு வகையான தொலைத்தொடர்பு சேவைகளுக்குமான கட்டணங்கள், அத்தகைய சேவைகளின் தரம், வகையறாக்கள் மற்றும் வழங்கப்படும் தொலைத்தொடர்பு கருவிகள் என்பன தொடர்பில் பாவனையாளர்கள், கொள்வனவாளர்கள், ஏனைய பயன்பாட்டாளர்கனையும் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் ஆணைக்குழுவால் எய்தப்படவுள்ள குறிக்கோள்களுள் இதுவும் ஒன்றாகும் என்பதனைத் தாங்கள் அறிவீர்கள். பிரிவு 4(இ) யைப் பார்க்கவும்.

ஆதலால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவால் தாங்கள் இத்தால் பின்வருமாறு பணிக்கப்படுகின்றீர்கள்:

(அ) இப்பணிப்புரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நேரத்தை அடிப்படையாகக்கொண்ட (செக்கன் ஒன்றுக்கு) கட்டணத்திற்கான இறுப்பனவுப் பிரேரணையொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறும்:

(ஆ) சட்டத்தின் 5(ஓ) என்னும் பிரிவிற்கிணங்க மாண்புமிக்க அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டபின்னர் இதனைப்பற்றி ஸ்ரீ.ரெ.லி வுக்கு அறிவிப்பதன்மீது அத்தகைய அறிவித்தலையடுத்து ஒரு மாதத்திற்குள் அதனை நடைமுறைப்படுத்துமாறும்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

*அருண அமரசேகர*
*பணிப்பாளர் தலைமையதிபதி*
*இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுக்குபடுத்துதல் ஆணைக்குழு*

2005 செப்டெம்பர் 23